



# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

## மானியக் கோரிக்கை எண் - 46

# தமிழ் வளர்ச்சி

## அறிவிப்புகள்

## 2019-2020

# தமிழ் வளர்ச்சித் துறை

**மானியக் கோரிக்கை எண் 46**

## அறிவிப்புகள்
## 2019 – 2020

**க. பாண்டியராஜன்**
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும்
தொல்லியல் துறை அமைச்சர்

# தமிழ் வளர்ச்சித் துறை

## அறிவிப்புகள்

1. அருட்பெருஞ்சோதி வள்ளலார் அவர்களின் பெயரில் புதிய விருது தோற்றுவித்து ஆண்டு தோறும் வழங்கப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** சமரச நெறிகளால் ஆன்மிகத் தொண்டாற்றும் ஒருவருக்கு **அருட்பெருஞ்சோதி 'வள்ளலார்'** பெயரில் ஆண்டுதோறும் விருது வழங்கப்படும். விருதுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும் ஒரு சவரன் தங்கப் பதக்கமும் தகுதிச் சான்றும் பொன்னாடையும் வழங்கப்பெறும். **இவ்விருதிற்கென ஆண்டுதோறும் ரூபாய் 1 இலட்சத்து 50 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**2. தேவநேயப் பாவாணர் அவர்களின் பெயரில் புதிய விருது தோற்றுவித்து ஆண்டுதோறும் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ் வேர்ச்சொல் ஆய்வு, அகராதி உருவாக்குதல் மற்றும் தனித்தமிழைப் பின்பற்றுதல் உள்ளிட்ட ஆய்வும் தமிழ் ஈடுபாடும் கொண்டு பணியாற்றும் தமிழறிஞர் ஒருவருக்குத் 'தேவநேயப் பாவாணர்' அவர்களின் பெயரில் ஆண்டுதோறும் விருது வழங்கப்படும். விருதுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும் ஒரு சவரன் தங்கப் பதக்கமும் தகுதிச் சான்றும் பொன்னாடையும் வழங்கப்பெறும். இவ்விருதிற்கென ஆண்டுதோறும் ரூபாய் 1 இலட்சத்து 50 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

## 3. காரைக்கால் அம்மையார் அவர்களின் பெயரில் புதிய விருது தோற்றுவித்து ஆண்டுதோறும் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, காரைக்கால் அம்மையாரின் படைப்பிலக்கிய நெறிகளில் தமிழ்த் தொண்டாற்றி வரும் மகளிர் ஒருவருக்கு '**காரைக்கால் அம்மையார்**' அவர்களின் பெயரில் ஆண்டுதோறும் விருது வழங்கப்படும். விருதுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும் ஒரு சவரன் தங்கப் பதக்கமும் தகுதிச் சான்றும் பொன்னாடையும் வழங்கப்பெறும். இவ்விருதிற்கென ஆண்டுதோறும் ரூபாய் 1 இலட்சத்து 50 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

## 4. வீரமாமுனிவர் அவர்களின் பெயரில் புதிய விருது தோற்றுவித்து ஆண்டுதோறும் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, வீரமாமுனிவர் நெறியில் அவர்தம் படைப்பு நடையில் காவியங்கள், சிற்றிலக்கியங்கள், மொழி பெயர்ப்புகள் என்ற வகையில் தமிழ்த் தொண்டாற்றிவரும் தமிழறிஞர் ஒருவருக்கு 'வீரமாமுனிவர்' அவர்களின் பெயரில் ஆண்டுதோறும் விருது வழங்கப்படும். விருதுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும் ஒரு சவரன் தங்கப் பதக்கமும் தகுதிச் சான்றும் பொன்னாடையும் வழங்கப்பெறும். இவ்விருதிற்கென ஆண்டுதோறும் ரூபாய் 1 இலட்சத்து 50 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

## 5. வாரணாசி இந்துப் பல்கலைக்கழகத்தில் மொழி ஆய்வுக்கூடம் தொடங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, வாரணாசி இந்துப் பல்கலைக்கழகத்தில் அயல்மொழியினருக்கு எளிதாகவும், விரைவாகவும் தமிழ் கற்பிக்கும் வகையில் மொழி ஆய்வுக்கூடம் தொடங்கப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 9 இலட்சத்து 60 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

6. வாரணாசி இந்துப் பல்கலைக்கழகத்தில் தமிழ் கற்கும் மாணவர்களுக்கு ஆண்டுதோறும் கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, வாரணாசி இந்துப் பல்கலைக்கழகத்தில் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்கும் இளநிலை, முதுநிலைப் பட்டயப் படிப்பு மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆண்டுதோறும் வழங்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 1 இலட்சத்து 85 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**7. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் மூலம் மயங்கொலிச் சொல்லகராதி உருவாக்கப்பட்டு எழுதுபொருள் அச்சுத்துறையின் மூலம் அச்சிட்டு வெளியிடப்படும்.**

தமிழ்மொழியில் உள்ள மாற்றொலியின் எழுத்துகள் தவறான பயன்பாட்டில் பொருள் மாற்றம் பெற்றுவிடுகின்றன. எனவே அவற்றைத் தெளிவிக்கும் வகையில் **மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மயங்கொலிச் சொல்லகராதியை 3** ஆண்டுக் காலத்திற்குள் தொகுத்து **200** பக்க அளவில் **எழுதுபொருள் அச்சுத் துறை மூலம் அச்சிட்டு வெளியிடப்படும்.**

8. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் மூலம் தமிழ் மரபுத்தொடர் அகராதி உருவாக்கப்பட்டு எழுதுபொருள் அச்சுத்துறையின் மூலம் அச்சிட்டு வெளியிடப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தொழில்முறைத் தொடர்பாகவும் பேச்சுவழக்குத் தொடர்பாகவும் தமிழ் மொழியில் வழங்கும் மரபுத் தொடர்களைத் தொகுத்து 300 பக்கங்களில் 'தமிழ் மரபுத்தொடர் அகராதி' எழுதுபொருள் அச்சுத் துறை மூலம் அச்சிட்டு 3 ஆண்டுக் காலத்திற்குள் வெளியிடப்படும்.

9. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் மூலம் பையடக்க அகராதி (Pocket Dictionary) உருவாக்கப்பட்டு எழுதுபொருள் அச்சுத்துறையின் மூலம் அச்சிட்டு வெளியிடப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** மாணவர்களும், பேராசிரியர்களும், பொதுமக்களும் பயன்பெறும் வகையில் சொற்களைத் தொகுத்து அவற்றிற்கான பொருள்கள், இலக்கணக் குறிப்புகள், இலக்கியக் குறிப்புகள், வாக்கிய வடிவங்கள் உள்ளிட்ட குறிப்புகளைத் தொகுத்து **பையடக்க அகராதி** மூன்றாண்டுக் காலத்திற்குள் **எழுதுபொருள் அச்சுத் துறை மூலம் அச்சிட்டு வெளியிடப்படும்.**

**10. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் மூலம் 'சொல்வயல்' என்ற பெயரில் மாத இதழ் தொடங்கப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சொல்லாய்வுகள், ஆய்வுக் கட்டுரைகள், அகராதியியல் சார்ந்த கருத்தரங்குகள், ஆய்வரங்குகள் தொடர்பான செய்திகளை ஆவணப்படுத்திச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநரை இதழாசிரியராகக் கொண்டு 'சொல்வயல்' என்ற பெயரில் மாத இதழ் வண்ணப்படங்களுடன் எழுதுபொருள் அச்சுத் துறை மூலம் அச்சிட்டு வெளியிடப்படும்.

11. தமிழ்ப் பல்கலைக்கழக மின் அமைப்புகளை சிறப்புச் சீர்காப்பு செய்திட ரூபாய் 30 இலட்சம் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்ப் பல்கலைக்கழக உயரழுத்த மின் நிலைய பகுதிக்கும் நூலகக் கட்டடத்திற்கும் இடையில் 36 ஆண்டுகள் பழமையான பழுதுற்ற புதை மின்வடத்தை மாற்றி புதிய மின்வடம் அமைக்கவும் மின் அமைப்புகளை புதுப்பிக்கவும் தொடராச் செலவினமாக ரூபாய் 30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

12. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வாயிலாக ஆண்டுதோறும் 50 தமிழாசிரியர்களுக்கு 20 நாள்கள் 'மொழியியல் நுணுக்கப் பயிற்சி' எனும் பொருண்மையில் புத்தாக்கப் பயிற்சி அளிக்க ஆண்டுதோறும் ரூபாய் 5 இலட்சம் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, வளர்ந்து வரும் தமிழியல் தொடர்பான நுணுக்கங்களையும் கணினித் தமிழ் வளர்ச்சிப் போக்குகளையும் அறிந்துகொள்ள ஏதுவாக ஆண்டுதோறும் 50 தமிழாசிரியர்களுக்கு 'மொழியியல் நுணுக்கப் பயிற்சி' எனும் பொருண்மையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தமிழ் மொழி மற்றும் மொழியியல் புலத்தின் வாயிலாக 20 நாள்கள் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

13. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன அண்ணா கருத்தரங்கக் கூடத்தின் உள்கட்டமைப்புகளை மேம்படுத்திட ரூபாய் 10 இலட்சம் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனப் புதிய அலுவலகக் கட்டடத்தில் 200 பார்வையாளர்கள் அமரும் வகையில் கட்டப்பட்டுள்ள அண்ணா கருத்தரங்கக் கூடத்தில் பார்வையாளர்கள், சிறப்பு விருந்தினர்கள் அமர்வதற்கான நாற்காலிகள் மற்றும் தரை விரிப்புகள் மேலும் குளிர் வசதிக்கு ஏற்ற வகையில் அறையை மேம்படுத்துதல் ஆகிய உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**15. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன மாணவர்கள் பிற மொழிகளைக் கற்றுக் கொள்ளச் சிறப்பு மொழிப் பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்கு ரூபாய் 6 இலட்சம் வழங்கப்படும்.**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி** அம்மா அவர்களின் ஆசியுடன், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பயிலும் மாணவர்கள் தமிழ் மொழியின் வளமையையும் அதன் சிறப்புகளையும் பிறமொழியினரிடையே எடுத்துக்கூறி கருத்துப் பரிமாற வசதியாக பிற மொழிகளைக் கற்றுக்கொள்ளும் வகையில் அம்மொழிகளில் புலமை பெற்ற சிறந்த மொழி ஆசிரியர்களைக் கொண்டு சிறப்பு மொழிப் பயிற்சி ஆண்டுதோறும் அளிக்கப்படும். **இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 6 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

## 16. உலகத் தமிழ்ச் சங்கம் வாயிலாக உலகத் தமிழ் அமைப்புகள் 2ஆம் தொகுதி நூல் வெளியிடப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ் அமைப்புகளின் பங்களிப்பினைத் தொகுத்தளிக்கும் வகையில் உலகத் தமிழ் அமைப்புகள் 2ஆம் தொகுதி நூல் வெளியிடப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 3 இலட்சம் வழங்கப்படும்.

**17. தொல்காப்பியர் திருவுருவச் சிலைக்கும் மற்றும் தமிழ்த்தாய் சிலைக்கும் சிறப்புச் செய்ய ரூபாய் 1 இலட்சத்து 80 ஆயிரம் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சித்திரை முழுமதி நாளன்று சென்னைப் பல்கலைக்கழக மெரினா வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள தொல்காப்பியர் திருவுருவச் சிலைக்கும் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் காப்பியக்காட்டில் அமைந்துள்ள தொல்காப்பியர் திருவுருவச் சிலைக்கும் ஆண்டுதோறும் மாலை அணிவித்தும் மலர் தூவியும் சிறப்புச் செய்யப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 60 ஆயிரமும், மதுரை, தமுக்கம் மைதானத்தில் அமைந்துள்ள தமிழ்த்தாய் சிலைக்கு நாள் தோறும் சிறப்புச் செய்திட தொடர் செலவினமாக ரூபாய் 1 இலட்சத்து 20 ஆயிரமும் என மொத்தம் ரூபாய் 1இலட்சத்து 80 ஆயிரம் ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்படும்.

## 18. தமிழ் ஆட்சிமொழிச் சட்ட வாரம் ஆண்டுதோறும் ரூபாய் 32 இலட்சம் செலவில் கொண்டாடப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் இயற்றப்பட்ட 27.12.1956ஆம் நாளை நினைவுகூரும் வகையில் ஆண்டுதோறும் திசம்பர் 21 முதல் 27 முடிய ஆட்சிமொழிச் சட்ட வாரமாக அனைத்து மாவட்டங்களிலும் கொண்டாடப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 32 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**19. தமிழ் வளர்ச்சித் துறை, காட்சி ஊடகங்களுடன் இணைந்து தமிழ்நாடு அளவில் மாணவர்களுக்கு குறள் வினாடி–வினா ஆண்டுதோறும் நடத்திப் பரிசுகள் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ் வளர்ச்சித் துறை காட்சி ஊடகங்களுடன் இணைந்து தமிழ்நாடு அளவில் மாணவர்களுக்கு குறள் வினாடி–வினா நிகழ்ச்சி ஆண்டுதோறும் நடத்திப் பரிசுகள் வழங்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**19. தமிழ் வளர்ச்சித் துறை, காட்சி ஊடகங்களுடன் இணைந்து தமிழ்நாடு அளவில் மாணவர்களுக்கு குறள் வினாடி–வினா ஆண்டுதோறும் நடத்திப் பரிசுகள் வழங்கப்படும்.**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ் வளர்ச்சித் துறை காட்சி ஊடகங்களுடன் இணைந்து தமிழ்நாடு அளவில் மாணவர்களுக்கு **குறள் வினாடி–வினா நிகழ்ச்சி** ஆண்டுதோறும் நடத்திப் பரிசுகள் வழங்கப்படும். **இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**20. திருக்குறளை உலக நூலாக ஐக்கிய நாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டு அமைப்பின் மூலம் (யுனெஸ்கோ) அங்கீகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** திருக்குறளை உலக நூலாக ஐக்கிய நாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டு அமைப்பின் மூலம் (யுனெஸ்கோ) அங்கீகரிக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். **இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**21. தமிழ் இலக்கியம் மற்றும் பிற பாடங்களைத் தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்குத் 'தமிழால் முடியும்' என்ற வாழ்க்கை வழிகாட்டிப் பயிற்சி மையம் தொடங்கப்படும்.**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ்நாட்டில் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் தமிழ் இலக்கியம் மற்றும் பிற பாடங்களைத் தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்குத் **'தமிழால் முடியும்'** என்ற வாழ்க்கை வழிகாட்டிப் பயிற்சி மையம் சென்னை, தஞ்சாவூர், மதுரை ஆகிய இடங்களில் தொடங்கி 32 மாவட்டங்களிலிருந்து 200 மாணவர்களை ஆண்டுதோறும் அழைத்து அவர்களுக்கு 3 நாள்கள் பயிற்சி அளிக்கப்படும். **இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 21 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

22. தமிழில் உள்ள உன்னத இலக்கியப் படைப்புகள் ஐக்கிய நாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டு அமைப்பின் (யுனெஸ்கோ) நடைமுறைக்கேற்ப உலக மொழிகளில் வெளியிடப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழில் பாதுகாக்கப்படவேண்டிய உலகின் உன்னதப் படைப்புகளான (Memories of the world) சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியங்கள் வரை உள்ள அரிய மற்றும் தரமான படைப்புகளை ஐக்கிய நாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டு அமைப்பின் (யுனெஸ்கோ) நடைமுறைக்கேற்ப வெளிப்படுத்தி ஏற்பு பெற்று உலக மொழிகளில் சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மூலம் ஆண்டுதோறும் வெளியிடப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

## 23. மொழிபெயர்ப்புத் துறை அலுவலர்களுக்குச் சிறப்பு ஆங்கிலப் பயிற்சி அளிக்கப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** மொழிபெயர்ப்புத் துறை அலுவலர்களுக்கு சென்னையிலுள்ள பிரிட்டிஷ் கலை நிறுவனத்தில் (British Council) **15** நாள்களுக்கு சிறப்பு ஆங்கிலப் பயிற்சியும் மற்றும் ஐதராபாத்திலுள்ள ஆங்கிலம் மற்றும் அயல்நாட்டு மொழிகளுக்கான மத்திய (Central Institute of English and Foreign Languages) நிறுவனத்தில் ஒரு மாதப் பயிற்சியும் அளிக்கப்படும். **இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 15 இலட்சம் வழங்கப்படும்.**

24. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ள திருக்குறள் ஓவியக் காட்சிக்கூடத்தின் வழியே திருக்குறள் ஓவியப் போட்டிகள் நடத்தி ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டில் பரிசுகள் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ள திருக்குறள் ஓவியக் காட்சிக் கூடம் வழியாக ஆண்டு தோறும் ஓவியப் போட்டிகள்நடத்தப்படும். இப்போட்டியில் திருக்குறள் நெறிப்படி சிறந்த ஓவியம் படைப்பவருக்கு பரிசு வழங்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**25. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனக் கல்விப் புலங்களின் வழியே துறை சார்ந்தப் பயிற்சிப் பட்டறைகள் நடத்துவதற்கு ரூபாய் 10 இலட்சம் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் செயல்பட்டு வரும் தமிழ் மொழி மற்றும் மொழியியல் புலம், தமிழ் இலக்கியம் மற்றும் சுவடியியல் புலம், சமூகவியல்–கலை மற்றும் பண்பாட்டுப் புலம், அயல்நாட்டுத் தமிழர் புலம் ஆகிய கல்விப் புலங்களின் வழியே மாணவர்களுக்குத் துறை சார்ந்த பயிற்சிப் பட்டறைகள் ஆண்டுக்கு நான்கு நடத்தப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**26. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை நிறுவிய பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர்த் திங்கள் 15 ஆம் நாளை நிறுவனர் நாளாக ஒவ்வொரு ஆண்டும் ரூபாய் 50 ஆயிரம் செலவில் கொண்டாடப்படும்.**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தோற்றுவிப்பதற்கு முழு முதற்காரணமாக விளங்கிய மேனாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர்த் திங்கள் 15ஆம் நாள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை நிறுவிய **'நிறுவனர் நாள்'** என ஆண்டுதோறும் கொண்டாடப்படும். மேலும், அன்றைய நாள் நிறுவன வளாகத்தில் வைக்கப்பட்டுள்ள **பேரறிஞர் அண்ணா** அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்துச் சிறப்புச் சொற்பொழிவு நடத்தப்படும். **இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 50 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**27. மதுரையில் உள்ள சங்கத் தமிழ்க் காட்சிக் கூடத்தில் உள்ள ஓவியங்கள், சிலைகள், கற்சிலைகள் உள்ளிட்ட கலைப்பொருள்களைப் புனரமைத்துப் பராமரிக்க ரூபாய் 10 இலட்சம் வழங்கப்படும்**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சங்கத் தமிழ்க் காட்சிக்கூடத்தில் அமையப் பெற்றுள்ள ஓவியங்கள், சிலைகள், கற்சிலைகள் உள்ளிட்ட கலைப்பொருள்களைப் புனரமைத்தல், அலுவலகக் கட்டமைப்பை ஏற்படுத்துதல் உள்ளிட்ட பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 5 இலட்சமும் தொடராச் செலவினமாக ரூபாய் 5 இலட்சமும் வழங்கப்படும்.

**28. மதுரை, உலகத் தமிழ்ச் சங்கத்தில் கருத்தரங்கம் மற்றும் இலக்கிய நிகழ்ச்சிகள் நடத்திட ரூபாய் 25 இலட்சம் வழங்கப்படும்.**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தேசிய, பன்னாட்டுக் கருத்தரங்கங்கள், இலக்கிய, இலக்கண வகுப்புகள், தமிழ் அமைப்புகளுடன் இணைந்து தேசியக் கருத்தரங்குகள், அயலகத் தமிழ் அமைப்புகளுடன் இணைந்து இலக்கிய நிகழ்ச்சிகள் மற்றும் அயலகத் தமிழறிஞர்கள் பங்குபெறும் சிறப்புச் சொற்பொழிவுகள் ஆகியவை ஆண்டுதோறும் நடத்தப்படும். **இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

29. உலகத் தமிழ்ச் சங்க அலுவலகப் பயன்பாட்டிற்குக் கணினிகள் மற்றும் அச்சுக் கருவிகள் வாங்கிட ரூபாய் 3 இலட்சம் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மதுரை, உலகத் தமிழ்ச் சங்க அலுவலகப் பயன்பாட்டிற்கென 5 கணினிகள் மற்றும் அச்சுக் கருவிகள் வழங்கப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 3 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

## 30. மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தில் கண்காணிப்புக் கருவிகள் பொருத்திட ரூபாய் 9 இலட்சம் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உலகத் தமிழ்ச் சங்கப் பெருந்திட்ட வளாகத்தில் வெளிப்புறப் பகுதியில் கண்காணிப்புக் கருவிகள் பொருத்தப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 9 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**31. தமிழ் அகராதியியலின் தந்தை எனப் போற்றப்படும் வீரமாமுனிவரின் பிறந்த நாளை தமிழ் அகராதியியல் நாளாகக் கொண்டாடப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ் அகராதியியல் அமைப்பு முறைக்கு முன்னோடியாக விளங்கிய வரும் தமிழ் அகராதியியலின் தந்தை எனப் போற்றப்படுபவருமான '**வீரமாமுனிவரின்**' பிறந்த நாளான நவம்பர் 8-ஆம் நாள் '**தமிழ் அகராதியியல் நாள்**'என ஆண்டுதோறும் கொண்டாடப்படும். இந்நிகழ்ச்சியில் அயல் நாட்டுத் தமிழறிஞர் ஒருவரை அழைத்து கருத்தரங்கம் நடத்துதல் உட்பட ஆகும் செலவினங்களுக்கு ஆண்டுதோறும் ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

32. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழாய்வு மாணவர்கள் பரிமாற்றத் திட்டத்திற்கு தற்பொழுது அரசு வழங்கும் தொகையான ரூபாய் 9 இலட்சத்திலிருந்து ரூபாய் 40 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் செயற்படுத்தப்பட்டுவரும் மாணவர்கள் பரிமாற்றத் திட்டத்தின் மூலம் அந்நிறுவனத்தில் பயிலும் முனைவர் பட்ட மாணவர்கள் வெளிநாட்டிற்கும், வெளிநாட்டு மாணவர்கள் இந்நிறுவனத்திற்கும் வருகைபுரிந்து ஆய்வினை மேற்கொள்ள ஆண்டுதோறும் ரூபாய் 9 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை விரிவுபடுத்திடும் நோக்கில் பல அயல்நாடுகளுக்கு 15 மாணவர்களுடன் 2 பேராசிரியர்கள்

ஆண்டுதோறும் உயர்ஆய்வுக்கு சென்றுவருவதற்கென ரூபாய் 40 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

33. தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் உள்ள புலங்களுக்கு வருகைதரு பேராசிரியர்கள் மற்றும் இலக்கிய ஆளுமையாளர்களை அழைத்து அவர்களின் அனுபவத்தையும் அறிவாற்றலையும் பயன்படுத்திக்கொள்ள ஆண்டுதோறும் ரூபாய் 54 இலட்சம் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் பிற பல்கலைக் கழகங்களிலிருந்து ஓய்வு பெற்ற பேராசிரியர்களின் அனுபவம் மற்றும் அறிவாற்றலை, ஆசிரியர்களும் மாணவர்களும் பயன்படுத்திக் கொள்ளும் விதமாக 10 வருகைதரு பேராசிரியர்களையும் 5 இலக்கிய ஆளுமையாளர்களையும் அழைத்தல். இவர்களுக்கு திங்கள் ஒன்றுக்கு ரூபாய்.30,000/– வீதம் (ரூபாய் முப்பதாயிரம்) மதிப்பூதியமாக அளிப்பதற்குத்தொடர்ச் செலவினமாக ரூபாய் 54 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**34. தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முதுகலைத் தமிழ் இலக்கியம் மற்றும் ஒருங்கிணைந்த முதுகலைத் தமிழ் இலக்கிய மாணவர்களுக்கு ரூபாய் 39 இலட்சத்து 60 ஆயிரம் செலவில் கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முதுகலைத் தமிழ் இலக்கியம் மற்றும் ஒருங்கிணைந்த முதுகலைத் தமிழ் இலக்கியம் பயிலும் மாணவர்களை ஊக்கப்படுத்திட திங்கள்தோறும் 45 மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகையாக ரூபாய் 2000/–வீதம் வழங்கப்படும். இதற்கெனத் தொடர்ச் செலவினமாக ரூபாய் 39 இலட்சத்து 60 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

## 35. சங்கப் புலவர்களுக்கு நினைவுத் தூண் அமைத்து ஆண்டுதோறும் மாலை அணிவித்துச் சிறப்புச் செய்யப்படும்.

சங்கப் புலவர்களை நினைவுகூரும் வகையில் தமிழ் வளர்ச்சித் துறையால் 1990ஆம் ஆண்டு 4 இடங்களில் நினைவுத் தூண்கள் நிறுவப்பட்டன. அதேபோன்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் மகிபாலன்பட்டியில் கணியன் பூங்குன்றனாருக்கு ஒரு நினைவுத் தூணும், விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூரில் கபிலருக்கு ஒரு நினைவுத் தூணும், தூத்துக்குடி மாவட்டம் கொற்கையில் மாறோக்கத்து நம்பலத்தனார், மாறோக்கத்து நப்பசலையார், மாறோக்கத்து முள்ளிநாட்டு நல்லூர் காவிதியார் மகன் புல்லங்காடனார், வெறி பாடிய காமக்கண்ணியார், முன்றுறையரையனார் ஆகிய 6 சங்கப் புலவர்களுக்கும் சேர்த்து ஒரு நினைவுத் தூண் என மொத்தம் 3 நினைவுத் தூண்கள் நிறுவிட

தொடராச் செலவினமாக ரூபாய் 40 இலட்சமும், இந்த 3 நினைவுத் தூண்களுக்கு ஆண்டு தோறும் மலர் தூவிச் சிறப்புச் செய்திட தொடர் செலவினமாக ரூபாய் 90 ஆயிரமும் என மொத்தம் ரூபாய் 40 இலட்சத்து 90 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

## 36. தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார் அவர்களின் பெயரில் 'சிற்றிதழ் பரிசு' என்ற புதிய விருது தோற்றுவித்து ஆண்டு தோறும் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்மொழியில் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைப் போற்றியும், பிறமொழிக் கலப்பின்றி எழுதியும் வெளியிடப்பட்டுவரும் நாளிதழ், வாரஇதழ் மற்றும் திங்களிதழ் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் ஓர் இதழைத் தெரிவு செய்து 'தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார்' அவர்களின் பெயரில் ஆண்டுதோறும் விருது வழங்கப்படும். இவ்விருது ஒவ்வொன்றிற்கும் விருதுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும், கேடயம், பாராட்டிதழ் மற்றும் பொன்னாடையும் வழங்கப்பெறும். இவ்விருதிற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 3 இலட்சத்து 75 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

37. தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் அயல்நாட்டுத் தமிழ் மாணவர்கள் ஆசிரியர்களுக்கான இலக்கிய – இலக்கண – பண்பாட்டுப் பயிற்சித் திட்டத்திற்கு ரூபாய் 30 இலட்சம் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ் மொழியைக் கற்பித்தல், இலக்கிய–இலக்கணப் பாடங்களின் வழி பேச்சு–எழுத்துத் தமிழை மேம்படுத்துதல் என்னும் அடிப்படையில் பிஜி மற்றும் கயானா (பிரிட்டிஷ்கயானா) நாட்டில் வாழும் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் மற்றும் தமிழ்ப் பயிலும் மாணவர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்கு தொடராச் செலவினமாக ரூபாய் 30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**க. பாண்டியராஜன்**
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும்
தொல்லியல் துறை அமைச்சர்

தொழிற்புரட்சி ஏற்படுவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அலைகடலில் பயணம் செய்து, திசை எட்டுக்கும் சென்று, தமிழின் பெருமையைத் தரணியெங்கும் பரப்பியவர்கள் நம் முன்னோர்கள். இன்றும் பூமியின் மேற்பரப்பில், பல்வேறு பகுதிகளில் தமிழர்கள் தங்கள் உயிரினும் இனிய தமிழோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவேதான் தமிழ் ஓர் உலகளாவிய மொழியாக இன்று விளங்கிக் கொண்டிருக்கிறது.

– மாண்புமிகு புரட்சித்தலைவி
**அம்மா** அவர்கள்